நாள்: 01.07.2014

**இன்றைய வேளாண் செய்திகள்**

தினமணி

**<u>சென்னையில் 3-ஆவது நாளாக மழை</u>**

**சென்னை**



சென்னையில் திங்கள்கிழமை பெய்த மழையின்போது வீசிய பலத்த காற்றில் சென்னை பல்கலைக்கழகத்தின் மதில் சுவரை உடைத்துக் கொண்டு சாலையில் விழுந்த மரம்.

சென்னையில் 3-ஆவது நாளாக திங்கள்கிழமை மாலை நகரின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்தது.

சென்னை உள்பட தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் கடந்த ஒரு வாரமாக 100 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கும் அதிகமான வெயில் மக்களை வாட்டியது. இந்த நிலையில் கடந்த இரண்டு நாள்களாக மாலை நேரத்தில் பலத்த மழை பெய்து வருகிறது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்திலும் புதுச்சேரியிலும் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்.

மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை ஒரு சில இடங்களில் பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம்

தெரிவித்துள்ளது.

மழை நிலவரம்: கடந்த 24 மணி நேரத்தில் வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் 120 மி.மீட்டரும், மேலாலத்தூரில் 100 மி.மீட்டரும், புதுச்சேரி, சேலம் மாவட்டம் கருமந்துறையில் தலா 90 மி.மீட்டரும், கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி,

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர், விழுப்பும் மாவட்டம் திருக்கோவிலூர் ஆகிய பகுதிகளில் தலா 80 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

மேலும் மயிலம், காஞ்சிரபுரம், மதுராந்தகம் மற்றும் திண்டிவனத்தில் தலா 60 மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

**<u>கொடைக்கானலில் மழை: பொதுமக்கள் மகிழ்ச்சி</u>**

**கொடைக்கானல்**

கொடைக்கானலில் பெய்த மழையின் காரணமாக

பொது மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

கொடைக்கானலில் பொதுவாக ஜூன் மாதம் பருவ மழை பெய்வது வழக்கம். ஆனால் பருவ நிலை மாற்றம் காரணமாக, கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்தது. இதனால் கொடைக்கானலில் ஜூன் மாதம் முழுவதும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தது.இந் நிலையில் கொடைக்கானலிலும் கடந்த பல நாள்களாக வெயிலின் தாக்கம் இருந்து வந்தது. இரவில் காற்றுடன் பனியும் நிலவி வந்ததால் குளிர் அதிகமாக நிலவி வந்தது. புறநகர்ப் பகுதிகளில் குடிநீர் பிரச்னை ஏற்படும் அபாயம் இருந்தது. இந்நிலையில் திங்கள்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தொடங்கிய மழை இரண்டு மணிநேரம் தொடர்ந்து பெய்தது.

பல நாள்களாக மழை இல்லாமல் இருந்த கொடைக்கானலில், பலத்த மழையால் விவசாயிகளும், பொது மக்களும் மகிழ்ச்சியடைந்தனர். நீர்வரத்து பகுதிகளான பாம்பார் அருவி, பியர் சோழா அருவி, வெள்ளி நீர்வீழ்ச்சி, பேரி பால்ஸ் போன்ற அருவிகளில் தண்ணீர் வரத்து காணப்பட்டது. மழையால் சுற்றுலாப் பயணிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

**<u>யு5-கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சபைக் கூட்டம்</u>**

**கோபி,**

கோபியில் யு5-கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சபைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

யு5-கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சபையின் பொதுக்குழு கூட்டம் சங்கத் தலைவர் நடராஜ் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் பழனிசாமி வரவேற்றார். பாசன சபைத் தலைவர் காளியப்பன் முன்னிலை வகித்தார்.

கூட்டமைப்பு தலைவர் காசியண்ணன், பொருளாளர் ஈஸ்வரமூர்த்தி, இணைச் செயலாளர் வெங்கடாசலபதி ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

இதில், தமிழக அரசு மற்றும் பொதுப்பணித் துறை கூகலூர் பிரிவு வாய்க்காலின் சேதமடைந்த பகுதிகளை சீரமைக்கவேண்டும். தமிழக அரசு, வேளாண்மைப் பொறியியல் துறை, கீழ்பவானி பாசன சபைக்கு உள்பட்ட அனைத்து சேதமடைந்த கொப்பு வாய்க்கால்களையும் சீரமைக்கவேண்டும்.

நீர்பாசனத் துறைக்கு அண்டை மாநிலங்களில் இருப்பது போல, தனியாக அமைச்சரும், அமைச்சகமும் அமைக்க தமிழக அரசு முன்வரவேண்டும். கோபி தாலுகாவில் இதுவரை வழங்கப்படாமல் உள்ள வறட்சி நிவாரணத் தொகையை உடனடியாக விவசாயிகளுக்கு வழங்கவேண்டும்.

தாலுகா வாரியாக உள்ள பயிர் காப்பீடு திட்டத்தை மாற்றி, பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தனி விவசாயிக்கும் வழங்கவேண்டும். அனைத்து வாய்க்கால்களிலும் ஆக்கிரமிப்புகளை அகற்றி, அளவீடு செய்யவேண்டும்.

தமிழக அரசு நடப்பு ஆண்டுக்கான, கரும்பு அரவை பருவத்துக்கு அறிவித்துள்ள விலை டன்னுக்கு ரூ. 2,650-ஐ உடனடியாக சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். அரசு அறிவித்துள்ள விலையையும், கரும்பு வெட்டிய 15 நாள்களுக்குள் நிலுவைத் தொகையும் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இணைச் செயலாளர் தேவனசாமி நன்றி கூறினார்.

**கோத்தகிரியில் விவசாய கூட்டு பொறுப்புக் குழுக் கூட்டம்**

**கோத்தகிரி,**

கோத்தகிரி ஐலண்ட் அறக்கட்டளை சார்பில் ஆதிவாசி மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கும் விதமாக விவசாயக் கூட்டு பொறுப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

சோலூர் மட்டம் மற்றும் கரிக்கையூர் ஆகிய ஆதிவாசி கிராமங்களில் ஞாயிறு மற்றும் திங்கள்கிழமைகளில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு ஐலண்ட் அறக்கட்டளை நிர்வாக செய லர் அல்போன்ஸ் ராஜ் தலைமை வகித்தார். அறக்கட்டளை உறுப்பினர் கிரிபாளனி, கரூர் தனியார் நிறுவன இயக்குநர் சுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில், ஆதிவாசி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்பாடுத்த ஐலண்ட் அறக்கட்டளை மூலமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் செயல்பாடுகள், வங்கிக் கடன் பெற நபார்டு வங்கியில் குழுக்களாக அமைத்து

பதிவு செய்தல், குழுவிற்குத் தேவையான பயிற்சிகள் ஆகியவை குறித்து விளக்கமளித்தனர்.

இதில், பருவநிலை மாற்ற ஒருங்கிணைப்பாளர்கள் பிரேம், சிவக்குமார் உள்பட ஆதிவாசி மக்கள் சுமார் 200-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். சுந்தராம்பாள் நன்றி கூறினார்.

**வந்தவாசியில் 54 மி.மீ. மழை**

**திருவண்ணாமலை**

திருவண்ணாமலை மாவட்டத்திலேயே அதிகபட்சமாக வந்தவாசியில் 54 மி.மீ. மழை பெய்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் திங்கள்கிழமை காலை விட்டு விட்டு மழை பெய்தது.

இதில் மாவட்டத்திலேயே அதிகபட்சமாக வந்தவாசியில் 54 மி.மீ. மழை பெய்துள்ளது. மேலும், ஆரணியில் 32.60, செய்யாறில் 7.50, செங்கத்தில் 22.40, சாத்தனூர் அணையில் 30.20, போளூரில் 42, திருவண்ணாமலையில் 40 மி.மீ., மழை பெய்துள்ளது.

மாவட்டம் முழுவதும் மொத்தம் 228.70 மி.மீ. மழை அளவு பதிவாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

**தருமபுரியில் 35 மி.மீ. மழை**

**தருமபுரி**

தருமபுரியில் ஞாயிற்றுக்கிழமை இரவு 35 மி.மீட்டர் மழை பெய்தது.

தருமபுரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பகல் நேரங்களில் 90 டிகிரிக்கும் அதிகமாக வெப்பம் வாட்டி எடுத்தது. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை இரவு வானம் திடீரென மேக மூட்டத்துடன் காணப்பட்டது. இரவு சுமார் 10 மணியளவில் பரவலாக மாவட்டம், முழுவதும் மழை பெய்யத் தொடங்கியது.

குறிப்பாக தருமபுரி பகுதியில் 35 மி.மீட்டர் அளவுக்கு மழை பெய்தது. நள்ளிரவு 12 மணி வரை மழை தொடர்ந்து பெய்ததால் தருமபுரி நகரில் உள்ள சாலைகள், தாழ்வான பகுதிகளில் மழை நீர் வெள்ளம் போல தேங்கி நின்றது.

மின்னல் தாக்கி பசு மாடு உயிரிழப்பு: தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பகுதியில் இடி, மின்னலுடன் மழை பெய்தது. இதில் பாலக்கோடு அருகே கிட்டேசம்பட்டியில் விவசாயி காளியப்பன் தனது வீட்டருகே பசு மாட்டை கட்டி வைத்திருந்தார். இந்த மழையில் மின்னல் தாக்கியதில் பசுமாடு உயிரிழந்தது.

மாவட்டத்தில் பதிவான மழையளவு (மி.மீட்டரில்): தருமபுரி 35, அரூர் 32.30, பாப்பிரெட்டிப்பட்டி 2.10, பாலக்கோடு 6.

**திருச்சி மக்களை குளிர்வித்த மழை**

**திருச்சி**

சித்திரை மாதத்தில் உள்ளது போன்ற வெயிலின் தாக்கம் கடந்த சில நாள்களாக திருச்சியில் இருந்து வந்த நிலையில், திங்கள்கிழமை மாலை தொடர்ந்து ஒரு மணி நேரத்துக்கும் மேலாக மழை பெய்தது.

சித்திரை, வைகாசி மாதங்களில் நிலவுவது போன்று வெயிலின் தாக்கம் கடந்த சில நாள்களாக திருச்சி மாநகர், புறநகர்ப் பகுதிகளில் இருந்து வந்தது. இதனால் அனைத்துத் தரப்பினரும் கடுமையாக அவதிப்பட்டு வந்தன்ர்.

வெப்பச் சலனத்தின்காரணமாக திங்கள்கிழமை மாலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்ட நிலையில், இரவில் மழை பெய்யத் தொடங்கியது. சத்திரம், மத்திய பேருந்து நிலையங்கள், தில்லைநகர், பட்டாபிராமன் சாலை, சிறிரங்கம், அம்மாமண்டபம், திருவானைக்கா, பாலக்கரை, தென்னூர், சாஸ்திரிசாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை தொடர்ந்து பெய்தது.

இதன் காரணமாக தாழ்வான பகுதிகளிலும், மாநகரின் பல்வேறு சாலைகளிலும் மழைநீர் தேங்கியது. இதனால் வாகனங்கள் ஊர்ந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. பல இடங்களில் மழைநீருடன் சாக்கடை நீரும் கலந்து சென்றதால் வாகன ஓட்டிகள் பெரிதும் அவதியுற்றனர்.

அதே நேரத்தில் பகலில் வெயிலின் தாக்கத்தால் அவதிப்பட்டு வந்த தங்களுக்கு இந்த மழை குளிர்மையத் தந்துள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

**<u>5 குதிரைத்திறன் சக்தியால் இயங்கும் பம்புகளுடன் நுண்ணீர் பாசன வசதி திட்டம்</u>**

**நாகர்கோவில்**

குமரி மாவட்டத்தில் 5 குதிரைத்திறன் சக்தியால் இயங்கும் பம்புகளுடன் நுண்ணீர் பாசன வசதி பெறும் திட்டத்துக்கு விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: சூரிய சக்தியால் இயங்கும் பம்புகளுடன் நுண்ணீர் பாசன வசதி அமைத்துக் கொடுக்கும் புதிய திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்தகைய பம்புகள் பராமரிப்புக்கு எளிது. சுற்றுப்புறச் சூழல் மாசுபடாது. கச்சா எண்ணெய் பயன்பாட்டை குறைக்கும் வகையில் உள்ளது.

தொடர்ச்சியான மின் விநியோகம் இல்லாத நிலையில், சூரிய சக்தியால் இயங்கக் கூடிய பம்புகள் பகல் முழுவதும் தொடர்ச்சியாக பாசனத்துக்கு தண்ணீர் இறைக்க உதவும். சூரிய தகடுகள், சூரிய சக்தியை மின்சக்தியாக மாற்றி மோட்டரை இயங்கச் செய்கிறது.

மானிய விவரம்: இத்திட்டத்தின் கீழ், சூரிய சக்தியால் இயங்கும் 5 குதிரைத்திறன் கொண்ட பம்புகள் திறந்தவெளி கிணறு மற்றும் நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து நீர் இறைக்கப் பயன்படுத்தப்படும் பம்புகள் ஆகியவை, குமரி மாவட்ட விவசாயிகளுக்கு 80 சதவீத மானியத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் வழங்கப்படும்.

தேசிய நுண்ணீர் பாசன இயக்கத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, மாநில அரசின் கூடுதல் பங்களிப்புடன் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படும். சூரிய சக்தியால் இயங்கும் பம்புகளுடன், சொட்டுநீர் பாசன வசதி கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் அகஸ்தீசுவரம், தோவாளை வட்டார விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் வேளாண்மைப் பொறியியல் துறை, தொழிற்பேட்டை, கோணம் நாகர்கோவில் கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டார விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் வேளாண்மைப் பொறியியல் துறை, மேட்டுக்கடை, பள்ளிவாசல் சமீபம் தக்கலை என்ற முகவரியில் இயங்கி வரும் உபகோட்ட அலுவலகங்களை உடனடியாக அணுகி விண்ணப்பிக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு செல்போன் 94438-52389, 94439-81132 மற்றும் 94432-82114 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## மாவட்டத்தில் பரவலான மழை

**விழுப்புரம்**

விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் திங்கள்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது.

விழுப்புரம், திருக்கோவிலூர், திண்டிவனம், உளுந்தூர்பேட்டை உள்ளிட்ட வட்டங்களில் ஆங்காங்கே பரவலாக மழை பெய்தது. பள்ளமான பகுதிகள், வயல்வெளிகளில் புதிதாக உருவாக்கப்பட்ட நகர்கள் ஆகிய இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றன.

இம் மழை காரணமாக சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் ஊர்ந்து சென்றன. விவசாய நிலங்களில் போதிய அளவு தண்ணீர் தேங்கியதால் நெல், வாழை, கரும்பு உள்ளிட்டவற்றை பயிர் செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

காலையில் கடும் வெயில் இருந்தும் இரவில் பெய்த மழையால் இதமான குளிர்காற்று வீசியது.

## பயிர்க் காப்பீடுத் திட்டம்: பதிவு செய்ய கால அவகாசம்

**பெங்களூரு**

கர்நாடகத்தில் பயிர்க் காப்பீடுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்ய வருகிற ஜூலை 31-ஆம் தேதி வரை கால

அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அந்த மாநில வேளாண் துறை அமைச்சர் கிருஷ்ண பைரேகௌடா தெரிவித்தார்.

கர்நாடக சட்ட மேலவையில் திங்கள்கிழமை கேள்வி நேரம் தொடங்கியதும் அவர் பேசியது:

கர்நாடகத்தில் தென் மேற்குப் பருவ மழை தாமதமாக பெய்யத் தொடங்கியுள்ளது. ஒருவேளை பலத்த மழை பெய்யத் தொடங்கினால், மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் விளைந்துள்ள பயிர்கள் சேதமடையலாம் என அஞ்சப்படுகிறது.

எனவே, வருகிற ஜூலை 31-ஆம் தேதி வரை விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்து கொள்ளலாம். விவசாயிகளின் நலனில் காங்கிரஸ் அரசு அக்கறை கொண்டுள்ளது என்றார் அவர்.

**<u>வறட்சி பாதித்த பகுதிகளில் நிவாரணம்</u>**

**பெங்களூரு,**

கர்நாடகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த மாநில வருவாய்த் துறை அமைச்சர் சீனிவாஸ் பிரசாத் தெரிவித்தார்.

கர்நாடக சட்டப்பேரவையில் திங்கள்கிழமை கேள்வி நேரத்தின் போது, காங்கிரஸ் உறுப்பினர் கே.பி.கோலிவாட்டின் கேள்விக்குப் பதிலளித்து அவர் பேசியது:

கர்நாடகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள 125 வட்டங்களில் நிவாரணப் பணிகளில் ஈடுபடுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள போதுமான நிதி வழங்கப்பட்டுள்ளது. நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி பெருமளவு செலவிடப்பட்டுள்ளது.

தென் மேற்குப் பருவமழை பொய்க்கும் சூழல் தென்படுகிறது. எனினும், இதுகுறித்து விவசாயிகள் கவலையடைய வேண்டாம். பருவ மழை பொய்த்து வறட்சி ஏற்பட்டாலும், அந்தச் சூழ்நிலையை சமாளிக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

இயற்கை பேரிடர் ஏற்பட்டாலும் அதைச் சமாளிக்க அரசு தயாராக உள்ளது. இயற்கை பேரிடர் மேலாண்மைக்காக மத்திய அரசு ரூ. 385.42 கோடி ஒதுக்கியுள்ளது. மாநில அரசு சார்பில் நிவாரணப் பணிகளுக்காக ரூ. 435.53 கோடி ஒதுக்கப்படும். மத்திய அரசு நிதி ஒதுக்குவதற்குமுன்பே மாநில அரசு நிவாரணப் பணிகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டது என்றார் அவர்.

**<u>கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதில் தாமதம்</u>**

**திருநெல்வேலி,**

தாமிரவருணி பாசனத்தில் கார் பருவ சாகுபடிக்கு அணைகளிலிருந்து தண்ணீர் திறப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தாமிரவருணி பாசனத்தில் ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் வரை மேற்கொள்ளப்படும் கார் பருவ சாகுபடிக்கு, பாபநாசம் அணையிலிருந்து ஜூன் மாதம் முதல் வாரத்தில் தண்ணீர் திறக்கப்படுவதுண்டு. பருவமழை சரிவர பெய்யாமல் அணைகளின் நீர்மட்டம் குறைந்து காணப்பட்டதால், கடந்த சில ஆண்டுகளாக கார் பருவ சாகுபடிக்கு அணைகளில் இருந்து உரிய சமயத்தில் தண்ணீர் திறக்க முடியாத நிலை உள்ளது.

2013ஆம் ஆண்டு கார் பருவ சாகுபடிக்கு பாபநாசம் அணையிலிருந்து ஜூன் மாதம் 20ஆம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. அன்றைய தேதியில் பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் 100 அடிக்கு அதிகமாக இருந்தது. ஆனால், நிகழ் பருவத்தில் தென்மேற்குப் பருவமழை தொடங்காத நிலையில் பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் உயரவில்லை. இதனால் சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதில் சிக்கல் எழுந்துள்ளது.

தாமிரவருணி பாசனத்தில் நதியின் தொடக்கத்தில் உள்ள 4 கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு முதல் கட்டமாக தண்ணீர் திறக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. ஆகவே, இம்மாதம் இறுதியில் அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தண்ணீர் திறப்பது குறித்து எந்த அறிவிப்பும் வெளியிடாததால் தண்ணீர் திறக்கப்படுமா என்ற கேள்வி

எழுந்துள்ளது. சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதால் தாமதம் ஏற்பட்டு வருவதால் கார் பருவமும் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

அணைகளின் நீர்மட்டம்: திங்கள்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 58.20 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 71.13 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 62.64 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 50.90 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 67 அடியாகவும், அடவிநயினார் அணையின் நீர்ம்டடம் 55.75 அடியாகவும், கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 45.55 அடியாகவும், குண்டாறு அணையின் நீர்மட்டம் 36.10 அடியாகவும் இருந்தது.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 845 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக 504 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. மணிமுத்தாறு அணையிலிருந்து பெருங்கால் பாசனத்துக்கு 75 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது.

தினமலர்

## பருவமழை மோசம்:சராசரிக்கும் குறைவு

**புதுடில்லி**:இந்தியாவில் கடந்த ஐந்தாண்டுகளில் இல்லாத அளவுக்கு 43 சதவீதத்திற்கு கீழ் குறைந்தது. இது சராசரிக்கும் கீழே குறைந்து மோசமான நிலை அடைந்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**'வெண்மை வறட்சி!' உலர் தீவன விற்பனை நிறுத்தம்; கால்நடை விவசாயிகள் ஏமாற்றம்**



**அன்னுார்** : கோவை மாவட்டத்தில், கால்நடை மருத்துவமனைகளில் உலர்தீவனம் கோரி வரும் விவசாயிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். இதனால், பால் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது. 'அரசின் மானிய விலை வைக்கோல் திட்டம்' செயல்படுகிறதா என்பது குறித்து, அரசு அறிவிக்க வேண்டும் என விவசாயிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தமிழகத்தில் பருவமழை போதிய அளவு பெய்யவில்லை. இதனால், கால்நடை வளர்ப்போர், தீவனம் கிடைக்காமலும், தீவன விலை உயர்வாலும் சிரமத்திற்குள்ளாகினர். இதையடுத்து, தமிழக அரசு மானிய விலையில் மாடுகளுக்கு தேவையான உலர் தீவனம் (வைக்கோல்) வழங்கப்படும் என அறிவித்தது. கடந்த பிப்ரவரியில் இத்திட்டம் துவங்கி, சில நாட்களிலேயே லோக்சபா தேர்தல் அறிவிக்கப்பட்டதால் முடங்கியது. மூன்று வாரங்களுக்கு முன் மீண்டும் இத்திட்டம் துவங்கியது. கால்நடை வளர்ப்போரிடம் விண்ணப்பங்கள் பெறப்பட்டது. 'ஒருவருக்கு அதிகபட்சமாக, ஐந்து மாடுகளுக்கு தேவையான உலர் தீவனம் மட்டும் வழங்கப்படும். ஒரு வாரத்துக்கு தேவையான வைக்கோல் மட்டும் தரப்படும். கிலோ இரண்டு ரூபாய்க்கு விற்கப்படும்' என, அறிவிக்கப்பட்டது.

அன்னூர் வட்டாரத்தில் ஏராளமான கால்நடை வளர்ப்போர் பதிவு செய்தனர். வெளிமார்க்கெட்டில் கிலோ எட்டு ரூபாய்க்கு விற்கும் வைக்கோல், கால்நடை மருத்துவமனைகளில், இரண்டு ரூபாய்க்கு கிடைப்பதால், விவசாயிகள் போட்டி போட்டு வாங்கினர். மேலும், பலர் வைக்கோல் கோரி விண்ணப்பித்தனர். இந்நிலையில், கடந்த 23ம் தேதி முதல் வைக்கோல் விற்பனை இல்லை.

அன்னூர் வந்தவர்களிடம், 'வைக்கோல் இருப்பு இல்லை. வந்தால் தெரிவிக்கிறோம்' என்று கூறி, திருப்பி அனுப்பினர். அதன்பின் எட்டு நாட்களாகியும், வைக்கோல் இதுவரை வரவில்லை. தினமும் ஏராளமானோர், கால்நடை மருத்துவமனைக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர். விவசாயிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதை தவிர்க்க, திட்டம் குறித்து அரசு வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

**'மழையால் சப்ளை இல்லை'** : விவசாயிகள் கூறுகையில், 'கோவை மாவட்டத்தில், பெரும்பாலான கால்நடை மருத்துவமனைகளில் உலர் தீவன விற்பனை இல்லை. இதனால், கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பால் உற்பத்தி குறையும் வாய்ப்புள்ளது. சில இடங்களில் மழை பெய்வதால், உலர் தீவன தேவை குறைவாகவே இருக்கும் என்று கருதி அரசே, இத்திட்டத்தை நிறுத்தியுள்ளது' என, தெரிவிக்கின்றனர். கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் தங்கவேல் கூறுகையில், “மழை பெய்துள்ளதால், உலர் தீவனம் சப்ளை செய்யும் ஒப்பந்ததாரர் வைக்கோல், கட்டி சப்ளை செய்ய முடியவில்லை. அதனால், சில நாட்கள் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதுவரை, 12 லாரிகளில், 66 டன் வைக்கோல், வினியோகிக்கப்பட்டுள்ளது,” என்றார்.

## **பசுந்தீவன அபிவிருத்தி திட்ட மானியம் ஈரோடு மாவட்டத்தில் ரூ.1.54 கோடி ஒதுக்கீடு**

**ஈரோடு**: ஈரோடு மாவட்டத்தில், பால் உற்பத்தியை அதிகரிக்க, மாநில பசுந்தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 1.54 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளதாக, கலெக்டர் சண்முகம் தெரிவித்தார்.

இதுகுறித்து கலெக்டர் சண்முகம் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் மொத்தம், 3.70 லட்சம் கால்நடைகள் உள்ளன. கறவை மாடுகளின் உற்பத்தி திறன் மற்றும் இனப்பெருக்க திறனை அதிகரிப்பதற்கு, சரியான, தீவன மேலாண்மை மிக முக்கியம்.

பால் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கு, ஈரோடு மாவட்டத்தில், கால்நடை பராமரிப்புத்துறைக்கு, 1,54 கோடி ரூபாய், மானியமாக நிதிஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தில், பயிர் வளர்க்க, 36 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

மேலும், அதிக விளைச்சல் தரும் கோ-3, கோ-4 ரக கம்பு பசுந்தீவனங்களை விவசாயிகள், தங்கள் நிலத்தில் வளர்க்க ஏக்கருக்கு, 2,000 ரூபாய் மானியமாக வழங்கப்பட உள்ளது.

மொத்தம், 450 ஏக்கர் பரப்பளவில், நீர்ப்பாசன வசதி இல்லாத, மானாவாரி நிலப்பகுதிகள் கொண்ட விவசாயிகளுக்கென, சோளப்பயிர் மற்றும் தட்டைப்பயிறு வளர்க்கும் திட்டத்தின் கீழ், 2,900 ஏக்கர் நிலப்பரப்பில், சாகுபடி செய்ய, 63.80 லட்சம் மானியம் அளிக்கப்படும்.

வறட்சி ஏற்படும் காலங்களில், கிடைக்கும் நீரை சேமித்து, பசுந்தீவனங்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் பொருட்டு, நீர்ப்பாசன மேலாண்மையை ஊக்குவிக்கும் வகையில், மழைத்தூவி எனப்படும், நீர்தெளிப்பான் கருவி, 220 விவசாயிகளுக்கு, 41.12 லட்சத்தில் மானியமாக வழங்கப்பட உள்ளது.

குறைந்தபட்சம், ஒரு ஏக்கர் நிலத்தில், பல்லாண்டு பசுந்தீவனங்களான கோ-3, கோ-4 சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, நீர் தெளிப்பான் கருவியின் விலையில், 75 சதவீதம் மானியம் அளிக்கப்படுகிறது.

மேலும், கால்நடைகளுக்கு புரதச்சத்து மிகுந்த, தீவனங்கள் அளிப்பதை ஊக்குவிக்க, 300 ஏக்கரில், அகத்தி மரக்கன்றுகளை நட தேவையான விதைகள், 100 சதவீத மானிய விலையில் அளிக்கப்படும்.

விவசாயிகளுக்கு, தலா, நான்கு கிலோ அகத்தி விதை அளிக்கப்படும். இதற்காக, 4.80 லட்சம் ரூபாய் மானியம் பெறப்பட்டு, அகத்தி விதை கொள்முதல் செய்யப்பட்டு, வினியோகிக்கப்பட உள்ளது. எனவே, இந்த திட்டத்தில், கால்நடை வளர்ப்போர் பயன்பெற, அருகில் உள்ள கால்நடை உதவி மருத்துவரை அணுகி, தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்துள்ளவர்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில், மானியம் வழங்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ரூ.23.10 லட்சம் மதிப்பில் வேளாண் பொருள் ஏலம்

**அந்தியூர்**: அந்தியூர் வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 23.10 லட்சத்துக்கு, விளை பொருட்கள் ஏலம் போனது.

அந்தியூர் வேளாண் கூட்டுறவு ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்துக்கு நேற்று, ஒலகடம், பூனா ச்சி, பருவாச்சி, எண்ணமங்கலம், புதுக்காடு, சத்தியமங்கலம், மை லம்பாடி, பிரம்மதேசம், பர்கூர் மற்றும் கர்நாடக மாநிலத்தில் இ ருந்தும், விவசாயிகள் விற்பனைக்காக பருத்தி, தேங்காய், எள், மக்காச்சோளம் ஆகிய விளைபொரு ட்களை கொண்டு வந்திருந்தனர்.

அங்கு, 28 ஆயிரம் தேங்காய், 4.50 முதல், 14 ரூபாய் வரை, 2.80 லட்சத்துக்கும், கொப்பரை தேங்காய், 200 மூட்டைகள், கிலோ, 89.95 முதல், 99.65 ரூபாய் வரை, 5 லட்சம் ரூபாய்க்கும், வெள்ளை மற்றும் கருப்பு ரக எள், 200 மூட்டைகள், கிலோ ஒன்றுக்கு, கருப்பு ரகம், 80.19 முதல், 93.89 வரையும், வெள்ளை ரகம், 91.69 முதல், 103.89 ரூபாய் வரை, 13 லட்சம் ரூபாய்க்கும் ஏலம் போனது.

மக்காச்சோளம், பத்து மூட்டை, கிலோ ஒன்றுக்கு, 13.21 முதல், 13.68 வரை, பத்தாயிரம் ரூபாய்க்கும், நிலக்கடலை காய்ந்தது, 200 மூட்டை, கிலோ ஒன்றுக்கு, 31.80 முதல், 47 ரூபாய் வரை, 2.20 லட்சம் ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, 23.10 லட்சம் ரூபா ய்க்கு ஏலம் நடந்தது. நேற்று நடைபெற இருந்த பருத்தி ஏல ம், வியாபாரிகள் அதிகம் வராத காரணத்தால், வரும் புதன் கிழமைக்கு

ஒத்திவைக்கப்பட்டது. இத்தகவலை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

## பருவமழை குறைந்ததால் விவசாயிகள் கவலை

**நாகர்கோவில்** : குமரி மாவட்ட மக்கள் கோடை மழை, தென்மேற்கு பருவமழை மற்றும் வட கிழக்கு பருவமழைகளை நம்பி விவசாயம் செய்து வருகின்றனர். இந்த ஆண்டு கோடை மழை மே மாதம் பெய்ய தொடங்கியது. இது தேவையான அளவு பெய்து பூமியை குளிர்வித்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இந்த மழையினால் தண்ணீர் இல்லாமல் இருந்த குளங்களில் தண்ணீர் நிரம்ப உதவியது. இதனை தொடர்ந்து தென்மேற்கு பருவமழை காலதாமதமாக ஜூன் 6-ந்தேதி முதல் பெய்ய தொடங்கியது. ஆனால் இந்த மழை இதுவரை போதுமான அளவு பெய்யவில்லை. இதனால் இந்த வருடம் தென் மேற்கு பருவமழை குமரி மாவட்ட மக்களை ஏமாற்றி விடுமோ என்று பயப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது. இந்த மழை பெய்யாவிட்டால் கன்னிப்பூ நெல் சாகுபடிக்கு தேவையான தண்ணீர் கிடைக்காமல் பயிர்கள் வாடி விடும்.இதை தவிர வாழை பயிர், மரச்சீனி பயிர் உள்பட எல்லா பயிர்களுக்கும் சாகுபடி குறைந்து விடும். குளங்கள், அணைகள் உள்பட எல்லா நீர் நிலைகளிலும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும். இதனால் விவசாயிகள் கவலையுடன் உள்ளனர்.

## மார்க்கெட் கமிட்டிக்கு மக்காசோளம் வரத்து

**சின்னசேலம்**: சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காசோளம் வரத்து அதிகரித்தது. நேற்று 100 மூட்டை மக்காசோளம் வந்தது. அதிகபட்சம் 1,326, குறைந்தபட்சம் 1,304, எள் 6 மூட்டை கள் வந்தன. அதிகபட்சம் 5,716, குறைந்தபட்சம் 5,293க்கு விலை போனது. கடந்த வாரம் 500 மக்காச் சோளம் மூட்டைகள் 6 லட்சத்து 63 ஆயிரத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டது. 30 எள் ஒரு லட்சத்து 72 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டன.

## மரக்காணத்தில் நெட்டை ரக கேழ்வரகு சாகுபடி அமோகம்

**மரக்காணம்**: நெட்டை ரக கேழ்வரகு சாகுபடியில் பக்கிங்காம் ஆற்றங்கரை பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மரக்காணம் முதல் கூனி மேடு வரை உள்ள பக்கிங்காம் ஆற்றங்கரைப்பகுதியில் கோடை பயிராக நெட்டை ரக கேழ்வரகு தேவிகுளம், நடுக்குப்பம், வண்டிப்பாளையம் கிராமங்களில் பயிரிடப்பட்டு வருகிறது. இதன் சாகுபடி பரப்பளவு குறைந்து விட்டாலும் பக்கிங்காம் ஆற்றங்கரையில் உள்ள ஒரு சில விவசாயிகள் தொடர்ந்து கேழ்வரகு சாகுபடி செய்துவருகின்றனர். சில ஆண்டுகளாக மரக்காணம் ஒன்றியத்தில் நெட்டை ரக கேழ்வரகு பயிரிடப்படுகிறது. கேழ்வரகு, சோளம், கம்பு ஆகியவற்றின் பயன்பாடு அதிகரித்துள்ளதால் கேழ்வரகு பயிரிடும் விவசாயிகள் நல்ல லாபம் பார்த்து வருகின்றனர். உற்பத்தி குறைவு, தேவை அதிகம் இருப்பதால் கேழ்வரகின் விலை அதிகரித்துள்ளது. இதையடுத்து கேழ்வரகு சாகுபடியில் விவசாயிகளுக்கு ஆர்வம் ஏற்பட்டுள்ளது. வேளாண்மை துறை அதிகாரிகளும் கேழ்வரகு, தானிய பயிர்களை சாகுப டி செய்ய வேண்டும் என விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி வருகின்றனர்.இருப்பினும் கூலி ஆட்கள் பற்றாக் குறை, நவீன இயந்திரங்கள் இல்லாதது போன்ற காரணங்களால் பெரியளவில் கேழ்வரகு சாகுபடி செய்வது தடைப்படுகிற து. எனவே அரசு நவீனரக இயந்திரங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

## மரவள்ளி கிழங்கு சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம்

**சங்கராபுரம்**: கல்வராயன்மலை கிராம விவசாயிகள் மரவள்ளி கிழங்கு சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். சங்கராபுரம் வட்டம் கல்வராயன்மலையை சேர்ந்த விவசாயிகள் குறுகிய கால பயிரான மரவள்ளி கிழங்கு சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கல்வராயன்மலையை சேர்ந்த பாலப்பட்டு, வடபாலப்பட்டு, மோட்டாம்பட்டி, பாச்சேரி, தும்பை ஆகிய கிராமங்களில் விவசாயிகள் மரவள்ளி கிழங்கை அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர்.

குறைந்த தண்ணீர் செலவில் 6 மாத பயிரான மரவள்ளி கிழங்கு விளைகிறது. ஆத்தூர், சேலம் மாவட்டத்தை சேர்ந்த சேகோ மில் உரிமையாளர்கள் சம்பவ இடத்திற்கு அறுவடை சமயத்தில் வந்து நேரடியாக வாங்கி செல்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு அலைச்சல் மிச்சமாகிறது. அறுவடை செய்த உடன் பணம் கிடைப்பதால் கல்வராயன்மலை கிராம விவசாயிகள் இந்த ஆண்டு அதிக அளவில் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்துள்ளனர். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு டன்னுக்கு கூடுதல் விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

## கோழிப்பண்ணை அமைக்க ரூ 46.80 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு

**கரூர்**: "கோழி வளர்ப்பு திட்டத்தில், 2014-15ம் நிதியாண்டில், கரூர் மாவட்டத்துக்கு, 160 அலகுகள் நாட்டுக்கோழிப்பண்ணைகள் அமைக்க, 46.80 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,' என கலெக்டர் ஜெயந்தி, தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

கோழிப்பண்ணை வளர்ப்பில் முன்னோடியாக விளங்கும் நாமக்கல், ஈரோடு, திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்கள் போல, பிற மாவட்டங்களிலும் கோழி வளர்ப்பினை ஊக்கவிக்கும் பொருட்டு, தமிழக அரசால், 2012-13 ம் ஆண்டு திட்டம் முதல் முறையாக செயல்படுத்தப்பட்டது. கரூர் மாவட்டத்தில், கடந்த ஆண்டு, நாட்டுக்கோழி மற்றும் கறிக்கோழி வளர்ப்பு திட்டம், 82.98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது.

திட்டத்துக்கு, தமிழக அரசு சார்பில், 25 சதவீத மானிமும், நபார்டு வங்கி மூலம் கோழிக்கான முதலீட்டு நிதியில் இருந்து, 25 சதவிக மானியமும் வழங்கப்படுகிறது. மீதமுள்ள, 50 சதவீதத்தைத பயனாளிகள் சொந்த செலவிலோ அல்லது வங்கியில் இருந்து கடனாகவோ பெற்றுக் கொள்ளலாம். சொந்த செலவில், கோழிப்பண்ணை அமைப்பவர்களுக்கு தமிழக அரசு, 25 சதவீத மானியம் மட்டும் வழங்கும். நபார்டு வங்கியின், 25 சதவிகி மானியத்தை பெற்றுவதற்கு, பயனாளிகள் வங்கியில் இருந்து கடன் பெற்றிருக்க வேண்டும். நாட்டுக்கோழி வளர்ப்பை, ஆண்டு முழுவதும் ஊக்குவிக்கும் பொருட்டு, இரண்டாம் தொகுப்பு கோழிக்குஞ்சுகள்

வாங்கும் செலவில், 50 சதவீத மானியமும், 3,125 ரூபாய், மூன்றாம் தொகுதி கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில், 30 சதவிகித மானியமும், 1,875 ரூபாய் வழங்கப்பட உள்ளது.

திட்டத்தில், விவசாயிகள், தனி நபர், தொழில் முனைவோர், சுய உதவிக்குழுக்கள் ஆகியோர் தேர்வு செய்யப்பட தகுதியானவர்கள். அவர்களிடம் இருந்து கோழிப்பண்ணை அமைக்க போதிய நிலம், தங்கள் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருக்க வேண்டும். கோழி வளர்ப்பில், முன் அனுபவம் உள்ளவர்களும், ஏற்கனவே கொட்டகை அமைத்த பயனாளிகள், புதிய கொட்டகை அமைத்து பண்ணையை விரிவாக்கம் செய்ய ஆர்வமுள்ளவர்களும், திட்டத்தின் மூலம் பயன்பெறலாம். தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை பயிற்சி மையத்தின் மூலம், மூன்று நாட்கள் கோழி வளர்ப்பு முறை குறித்து பயிற்சி அளிக்கப்படும். கரூர் மாவட்டத்துக்கு, கலெக்டரின் ஒப்புதலுடன் கறிக்கோழி வளர்ப்புக்கும், பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள வங்கிகளின் கடன் வழங்குவதற்கான ஒப்புதல் கடிதம் வங்கி மேலாளரிடம் இருந்து பெற்று, அப்பகுதி கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரிடம் கொடுத்து பயன் பெறலாம். முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். விருப்பமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வேதாரண்யத்தில் மழை

**வேதாரண்யம்**: வெப்ப சலனம் காரணமாக, நாகை மாவட்டம், வேதாரண்யம், கோடியக்கரை, கோடியக்காடு, மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் மழை பெய்தது.

கடந்த இரண்டு மாதங்களாக, மக்கள் வெளியே வரமுடியாத அளவிற்கு வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருந்தது. நேற்று காலை திடீர் மழை பெய்தது. வேதாரண்யத்தில், 11.4 மி.மீ., மழை பதிவாகியது. கோடியக்கரை வனவிலங்கு சரணாலயத்தில் உள்ள மான்கள், குதிரைகள் உள்ளிட்ட விலங்குகளுக்கு. ஒரு

வாரத்திற்கு இந்த மழை பயனள்ளதாக இருக்கும். கால்நடைகளுக்கு மட்டும் இன்றி சவுக்கு, முந்திரி, மா, போன்ற பணப்பயிர்களுக்கும் ஏற்றதாக உள்ளது.

## பூக்கள் விலை சரிவால் விவசாயிகள் கவலை

**ப.வேலூர்:** ப.வேலூர் பூ மார்க்கெட்டில், பூக்களின் விலையில், கடுமையாக சரிவு ஏற்பட்டதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

ப.வேலூர் பஸ் ஸ்டாண்ட் பின்புறம் உள்ள பூ மார்க்கெட்டில், நேற்று, ப.வேலூர், கபிலர்மலை, பிலிக்கல்பாளையம், பரமத்தி, கரூர் அடுத்த சோமங்கி, ஈரோடு அடுத்த சிவகிரி, திருச்சி அடுத்த காட்டுப்புத்தூர், உன்னியூர் பகுதிகளில் இருந்து, குண்டுமல்லி, அரளி பூ விற்பனைக்கு வந்தது.

பூக்கள் வரத்து அதிகரித்ததாலும், தேவை குறைவானதாலும், வெளியூர் வியாபாரிகள் வரவில்லை. நேற்று முன்தினம், 300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட குண்டு மல்லி, நேற்று, ஒரு கிலோ, 70 ரூபாய்க்கு ஏலம் போனது. 100க்கு ஏலம் போன, அரளி பூ, நேற்று, ஒரு கிலோ, 40 ரூபாய்க்கு விற்பனையானது. கடும் விலை சரிவால், விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். பூ வியாபாரிகள் சிலர் கூறியதாவது:

திருமணம், திருவிழா போன்ற விசேஷங்கள் நேற்று முன்தினத்துடன் முடிந்தது. வரும் நாட்களில் எவ்வித விசேஷமும் இல்லை. மேலும், வழக்கத்தை காட்டிலும், அதிகளவில் வரத்தும் அதிகரித்தது. அதனால், பூக்களின் தேவை வெகுவாக குறைந்தது. விலை சரிவால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## நாமக்கல்லில் மரபணுவியல் முட்டை கோழி அறிமுகம்

**நாமக்கல்**: மரபணுவியல் முறையில், முட்டை கோழி உற்பத்தி குறித்து, அம்ரித் குழுமத்தின் சார்பில், நேற்று நாமக்கல்லில் பண்ணையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

கொல்கத்தாவை தலைமையிடமாக கொண்டு செயல்படும், அம்ரித் பிராய்லர் கோழி உற்பத்தி நிறுவனம், நேற்று நாமக்கல்லில் தன் மார்க்கெட்டிங் கிளையை

திறந்தது. முன்னதாக, பண்ணையாளர்களை சந்தித்து, மரபணுவியல் முட்டை கோழி குறித்த புதிய தகவல்களை நிர்வாகிகளிடம் தெரிவித்தனர்.
தலைமை செயல் அதிகாரி ரவீந்திரன் கூறியதாவது:
அம்ரித் குழுமம், கமர்சியல் சந்தையை விரிவுபடுத்தும் நோக்கில், ஹை-லைன் பிரீடு லேயர் சிக்ஸ்களை, நாமக்கல் மற்றும் ஹைதராபாத் நகரங்களில் துவங்கவுள்ளது. அந்த நிறுவனத்தில் இருந்து உற்பத்தி செய்யப்படும் முட்டை கோழிகள், உயிர்வாழ் திறன், தீவின சேமிப்பு, உயர்தர முட்டை உள்ளிட்ட அம்சங்களை கொண்டுள்ளது.
முட்டை உற்பத்தி செலவு குறைவாகவும், அதன் ஓடுகள் மிக உறுதியாகவும் இருக்கும். நவீன அறிவியல் ஆராய்ச்சிகளின் முடிவாக, மரபணு சேர்க்கை முறையில், வணிக ரீதியாக ஹை-பிரீடு சேஷன் முறையில், முட்டை கோழி உற்பத்தி சந்தைப்படுத்தப்படுகிறது.
புதிய மரபணு கண்டுபிடிப்புகளால், முட்டை கோழி உற்பத்தியில், தினமும், 105 கிராம் தீவனம் எடுத்துக் கொள்ளும் கோழி, 95 கிராம் மட்டுமே எடுத்துக் கொள்ளும். முட்டை கோழி, 25வது வாரத்தில், 65 கிராம் வரையிலான முட்டைகளை உற்பத்தி செய்யும். 95 சதவீதம் நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட கோழிகள், மரபணுவியல் முறையில் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## 'மணம்' தராத 'ஜெரேனியம்' சாகுபடி! ஊக்குவிப்பு இல்லாமல் அல்லல்படும் நீலகிரி விவசாயிகள்

**ஊட்டி** : வாசனை திரவியப் பொருள் தயாரிப்பில் முக்கிய பங்கு வகித்து, அன்னிய செலாவணியை ஈட்டித் தரக்கூடிய, 'ஜெரேனியம்' சாகுபடிக்கு, அரசின் ஊக்குவிப்பு இல்லாததால், நீலகிரி மாவட்ட விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். நறுமணப் பொருட்களின் வரிசையில், 'ஜெரேனியம்' என்ற தாவரத்தின் மலர்களில் இருந்து தயாரிக்கப்படும், நறுமண தைலம் மற்றும் அவற்றை கொண்டு தயாரிக்கப்படும், பலவகை வாசனை திரவியப் பொருட்களுக்கு, மக்கள் மத்தியில் வரவேற்பு அதிகம்.குறிப்பாக, மும்பை, பெங்களூரு, சென்னை உட்பட பெரு

நகரங்களிலும், வெளி நாடுகளில் நட்சத்திர ஓட்டல்கள், பல்பொருள் அங்காடிகளில், இத்தகைய வாசனை திரவியங்கள் அதிகளவில் விற்கப்படுகின்றன. தவிர, ஜெரேனியம் தாவரத்தின் மலர்களில் இருந்து தயாரிக்கப்படும் 'பன்னீர்' என்ற நறுமணப் பொருள், திருமணம் மற்றும் சுபநிகழ்ச்சிகளில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**மணம் வீசிய விவசாயம்:** உள்நாடு மற்றும் வெளிநாடுகளில், ஜெரேனியம் தயாரிப்பு நறுமணப் பொருட்களுக்கு கிராக்கி அதிகம். அத்தகைய தாவரங்கள், கடல் மட்டத்தில் இருந்து, 2,000 அடி உயரத்துக்கு மேல் உள்ள மலைப்பாங்கான இடங்களில் நன்கு வளரும் என்ற நிலையில், நீலகிரி மாவட்டத்தில், பல இடங்களில், பல ஏக்கர் பரப்பளவில், ஜெரேனியம் செடிகள் வளர்க்கப்பட்டு வந்தன. மாநில அரசு, தோட்டக்கலை துறை மூலம், 'நறுமணப் பொருட்கள் வளர்ப்பு திட்டம்' என்ற பெயரில், ஜெரேனியம், குறுமிளகு, ஏலக்காய் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, மானியம் உட்பட சலுகைகளை வழங்கி வந்தன.

**ரத்தானது திட்டம்** : சில ஆண்டுகளுக்கு முன், நறுமணப் பொருட்கள் வளர்ப்பு திட்டத்தை, மாநில அரசு ரத்து செய்தது. விளைவாக, விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை சார்பில் வழங்கப்பட்டு வந்த சலுகை மற்றும் உதவிகளும் நிறுத்தப்பட்டன. இதனால், ஜெரேனியம் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். தற்போது ஊட்டி சின்ன குன்னுார், கவரட்டி, காவிலோரை உள்ளிட்ட சில கிராமங்களில், மிகக் குறைந்த பரப்பளவில் மட்டுமே, ஜெரேனியம் சாகுபடி நடக்கிறது.விவசாயிகள் சிலர் கூறுகையில், 'நீலகிரியில் தேயிலை மற்றும் கொய்மலர் சாகுபடிக்கு மாற்றாக உள்ள, 'ஜெரேனியம்' சாகுபடியை அரசு ஊக்குவித்தால், எங்களின் வாழ்வாதாரம் சிறப்பாக அமையும்' என்றனர்.

## கோத்தகிரி தொழிற்சாலைகளில் கொள்முதல் நிறுத்தம்; தோட்டங்களில் இலைவரத்து அதிகரித்தும் தேக்கம்

**கோத்தகிரி** : கோத்தகிரி சுற்றுப்புற பகுதி, பல தனியார் தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளதால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த மழையால்,தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை மகசூல் பல மடங்கு அதிகரித்துள்ளது. அறுவடைக்கு தயாரான பசுந்தேயிலை, நேரிடையாவோ அல்லது கொள்முதல் நிலையங்கள் மூலமாகவோ, தொழிற்சாலைகளுக்கு வினியோகிக்கப்படுகிறது. கோத்தகிரி சுற்றுப்புற பகுதிகளில், இயங்கிவந்த "இன்கோ' தொழிற்சாலைகள் ஏற்கனவே, மூடுவிழா கண்டுள்ளன. இதனால், தனியார் தொழிற்சாலைகளை மட்டுமே நம்பி, விவசாயிகள் பசுந்தேயிலையை வினியோகித்து வருகின்றனர். தற்போது, பசுந்தேயிலை வரத்து பலமடங்கு அதிகரித்து, தொழிற்சாலைகளில் உற்பத்தியில் அளவை மீறி தேக்கம் ஏற்பட்டுள்ளது.

**கொள்முதல் நிறுத்தம் :** தொழிற்சாலைகளின் கட்டமைப்பு மற்றும் இயந்திரங்களில் திறனுக்கு ஏற்ப, நாளொன்றுக்கு 15 ஆயிரம் கிலோமுதல் 25 ஆயிரம் கிலோவரை மட்டுமே, பசுந்தேயிலையை அரைக்க முடியும் என்பதால், பல தனியார் தொழிற்சாலைகளில் கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது. சில தொழிற்சாலைகளில் மதியம் 2:00 மணிவரை மட்டுமே, கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், தோட்டங்களில் தரமான பசுந்தேயிலை இருந்தும், வினியோகிக்க முடியாமல் சிறு விவசாயிகள் திணறி வருகின்றனர்.

**விலை குறைப்பாலும் "அடி' :** தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை தேக்கத்தை காரணமாக கூறி, விவசாயிகளுக்கு முன்பணம் மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன. பொதுவாக, ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு தரத்துக்கு ஏற்ப, "ஏ' கிரேடு, "பி' பிளஸ் கிரேடுகளுக்கு 13 முதல் 22 ரூபாய் வரை விலை கிடைக்கவேண்டிய நிலையில், தற்போது 7 முதல் 10 ரூபாய் வரை மட்டுமே முன்பணம் வழங்கப்படுகிறது. இதனால், தோட்ட தொழிலாளர்களுக்கு கூலி கொடுப்பதற்கு கூட, விவசாயிகள் திண்டாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இனிவரும் நாட்களில், மழை அதிகரிக்கும் பட்சத்தில், பசுந்தேயிலை மகசூல் மேலும் அதிகரிக்கும். இந்நிலையில், பல தனியார் தொழிற்சாலைகளும் இலை கொள்முதலை நிறுத்துவதால், தோட்டங்களில் தரமான பசுந்தேயிலை முதிர்ந்து "கரட்டு' இலையாக மாற வாய்ப்புள்ளது. இதனால், விவசாயிகளுக்கு மேலும் நஷ்டம் ஏற்படும் அபாயம் உள்ளது

கோத்தகிரி சிறு விவசாயி போஜன் கூறுகையில்,""தற்போதுள்ள இக்கட்டான சூழ்நிலையை கருத்தி கொண்டு, தேயிலை வாரிய அதிகாரிகள், கோத்தகிரி சுற்றுப்புற பகுதிகளில் ஆய்வு செய்து, சிறு விவசாயிகளின் பிரச்னைக்கு தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

## கனமழையால் விவசாயிகள் மகிழ்ச்சி; காலநிலை மாற்றத்தால் குளிர்ச்சி

**ஊட்டி** : நீலகிரி மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில், பல நாட்களுக்கு பின்பு நேற்று கனமழை பெய்தது; காலநிலையில் மாற்றம் ஏற்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் நடப்பாண்டு பெய்ய வேண்டிய, தெற்மேற்கு பருவமழை உரிய காலத்தில் பெய்யவில்லை. இதனால், கார்போகத்தை நம்பியிருந்த மலை காய்கறி விவசாயிகளும், கூடலூர் பகுதிகளின் நெல் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டன. ஊட்டி சுற்றுப்புற பகுதிகளில் 300 ஏக்கருக்கு மேல், உருளை கிழங்கு தோட்டங்கள் தண்ணீர் இன்றி பாதிக்கப்பட்டன. குன்னூரில் நாளுக்கு நாள் தண்ணீர் தட்டுப்பாடு அதிகரித்து, மக்கள் குடிநீரை விலை கொடுத்து வாங்கி வந்தனர். இந்நிலையில்,நேற்று மதியம், ஊட்டி, குன்னூர், கூடலூர் ஆகிய பகுதிகளில், கனமழை பெய்ய துவங்கியது. சில மணிநேரம் மழை தொடர்ந்ததால், நீர் நிலைகளில் ஓரளவு தண்ணீர் வரத்து தென்பட்டது.மேலும், தேயிலை மற்றும் காய்கறி தோட்டங்கள் ஈரம் கண்டுள்ள நிலையில், தோட்டங்களில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தயாராகினர். இந்த மழை சில நாட்கள் தொடர்ந்து பெய்தால், தண்ணீர் தட்டுப்பாட்டுக்கு ஓரளவு தீர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. நேற்று மழையால் ஊட்டியில் குறைந்தபட்சம் வெப்பநிலை 9 டிகிரி செல்சியசாகவும், அதிகபட்ச வெப்பநிலை 18 டிகிரி செல்சியசாகவும் இருந்தது. இந்த மாற்றத்தால், இரவில் கடும் குளிர் நிலவியது.

## கொடைக்கானல், தாண்டிக்குடி மலைகிராமங்களில் சாரல் மழை

**கொடைக்கானல்** : கொடைக்கானல், தாண்டிக்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மலைக்கிராமங்களில் நேற்று மதியம் சாரல் மழை பெய்ததது. கொடைக்கானலில் நேற்று காலை முதலே வானம் மப்பும் மந்தாரமாக இருந்தது.

நேற்று பகல் 1 மணிக்கு மேகங்கள் சூழ்ந்தன. மாலை 3 மணி முதல் மிதமான மழை பெய்ய துவங்கியது. காற்று வீசாமல் பெய்த மழை, மாலை 5.15 மணி வரை நீடித்தது. தெருக்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. போட்கிளப்பில் 14 மி.மீ., மழை பதிவானது. கொடைக்கானலில் ஒரு மாதத்திற்கு பிறகு மழை பெய்ததால், நகர மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். வெள்ளி நீர்வீழ்ச்சியில் தண்ணீர் பெருக்கெடுத்தது. நகராட்சி குடிநீர்த்தேக்கத்தில், ஒரு அடியாக இருந்த நீர்மட்டம், உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.தாண்டிக்குடி: கடந்த ஒரு மாதமாக சுட்டெரிக்கும் வெயிலுடன் வறண்ட வானிலை நீடித்து வந்தது. இதையடுத்து கடந்த சில தினங்களாக வானம் மேகமூட்டத்துடன் அவ்வப்போது சாரல் மழை பெய்து வருகிறது. தடியன்குடிசை, மஞ்சள்பரப்பு, குப்பம்மாள்பட்டி பகுதியில் அரைமணி நேரம் மிதமான மழை பெய்தது. நேற்று மாலை 3 மணிக்கு துவங்கிய சாரல் மழை படிப்படியாக மிதமான மழையாக பெய்து கொண்டே இருந்தது. தென் மேற்கு பருவ மழை எதிர்பார்த்த விவசாயிகளுக்கு ஏமாற்றம் மிஞ்சியது. இருந்த போதிலும் மலை விவசாயங்களான காபி, மிளகு, ஆரஞ்சு, மலை வாழை ஆகியவற்றிற்கு நல்ல மழை பெய்தால் மட்டுமே ஓரளவு மகசூலை ஈட்ட முடியும். தற்போதைய சாரல் மழை குறுவிவசாயப் பயிர்களுக்கு ஏற்றதாக அமைந்துள்ளது.

**உழவர்சந்தையில் மீன்கள் விற்பனை**

**தேனி** : தேனி உழவர்சந்தைகளில் மீன் விற்பனை அதிகரித்து உள்ளது.நீர்வள, நிலவள மேம்பாட்டு திட்டத்தில் கண்மாய்கள், குளங்களில் மீன் வளர்க்கும் விவசாயிகளுக்கு நூறு சதவீதம் மானிய உதவி வழங்கப்படுகிறது.இங்கு வளர்க்கப்படும் மீன்களை விவசாயிகள் உழவர்சந்தைகளில் கொண்டு வந்து விற்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இதற்காக உழவர்சந்தைகளில் மீன்கடைகள் தனியாக திறக்கப்பட உள்ளது. விவசாயிகள் தவிர மற்றவர்கள் மீன்விற்க அனுமதியில்லை. இத்திட்டத்தின் கீழ் தேனி, கம்பம் உழவர்சந்தைகளில் விரைவில் மீன்கள் விற்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் இத்திட்டம் தாமதம் ஆகி வருகிறது. ஆனால் தேனி உழவர் சந்தைக்கு தினமும் காலையில் 5 ஆயிரம் பேர் வரை வந்து

காய்கறிகள் வாங்கிச் செல்கின்றனர். இவர்களின் வசதிக்காக, உழவர்சந்தையில் தினமும் தனியார்கள் மீன்கடை திறந்துள்ளனர். மீன், கருவாடு, அப்பளம், போன்றவற்றை தனியார் விற்பனை செய்கின்றனர். இதன் விற்பனையும் களைகட்டி உள்ளது.

<u>**திருமானூரில் நெல் நடவு எந்திர குழுக்களுக்கான தொழில்நுட்ப பயிற்சி**</u>

**திருமானூரில்,** நெல் நடவு எந்திரங்களுக்கான தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. இதில் திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தொழில்நுட்ப பயிற்சி

திருமானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டமன்றத்தில் வேளாண்துறை மற்றும் வேளாண் பொறியியல்துறை சார்பில் நெல் குறுவை சாகுபடி சிறப்பு திட்டத்தின் கீழ் எந்திர குழுக்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

குறுவை நெல் சாகுபடி பரப்பினை அதி கரித்து நெல் உற்பத்தியை உயர்த்துவதே குறுவை தொகுப்பு திட்டத்தின் நோக்கமாகும், இத்திட்டம் வேளாண்மை எந்திரமயமாக்கல் அடிப்படையில் திருமானூர் வேளாண் வட்டாரத்தில் 5 குழுக்களுக்கு நெல் நடவு எந்திரம் 100 சதவீதம் மானியத்தில் வழங்கிட இலக்கு பெறப்பட்டு அந்த குழுக்களுக்கு இந்த பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக்கு வேளாண்இணை இயக்குநர் குணசேகரன் தலைமை தாங்கினார். ஒன்றிய குழு தலைவர் சீனிவாசன் முன்னிலை வகித்தார். பயிற்சி தொடர்பான விபரங்களையும்,

குழு ஆரம்பிப்பது தொடர் பான விபரங்களை இளநிலை பொறியாளர் முருகதாஸ் எடுத்து கூறினார்.

செயல் விளக்கம்

பயிற்சியில் வேளாண் எந்திர குழு தலைவர் ஏலாக்குறிச்சி அபிமன்யூ குழுவினர் செயல்பாடுகள் குறித்து விவசாயிகளிடம் அனுபவத்தினை பகிர்ந்து கொண்டார். பயிற்சி முடிவில் நெல் இயந்திர நடவு முறைக்கு உகந்த வகையில் மூன்று வகையான நாற்றங்கால் அமைப்பது குறித்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுபாடு) முரளிதரன், வேளாண் அலுவலர் (தரக்கட்டுபாடு) கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் செல்வகுமார் மற்றும் வேளாண் அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**<u>கொடைக்கானலில் 3 மணி நேரம் பலத்த மழை அருவிகளில் வெள்ளப்பெருக்கு</u>**



**கொடைக்கானலில்,** பலத்த மழையால் அருவிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து கொட்டியது.

<u>கொடைக்கானல்</u>

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக மழை இல்லாததால் கடும் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வந்தது. நேற்று முன்தினம் லேசான சாரல் மழை பெய்தது. இந்நிலையில் நேற்று காலை முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. இதனைதொடர்ந்து மாலை 3.15 மணி முதல் 4.45 மணி வரை பலத்த மழை பெய்தது. இந்த மழை சுமார் 1½ மணி நேரம் நீடித்தது. நகர் பகுதியில் உள்ள சாலையோரங்களில் வெள்ளம் ஓடியது.

வெள்ளி நீர்வீழ்ச்சியில் தண்ணீர் பெருக்கெடுத்து கொட்டியது. இதனால் பழனி நகருக்கு செல்லும் குடிநீரின் அளவு அதிகரித்து உள்ளது. இதே போல் பியர்சோழா அருவி, பாம்பார் அருவி பகுதிகளில் பலத்த மழையால் வெள்ளம் பெருக்கெடுத்து கொட்டியது. இந்த மழையால் கொடைக்கானலில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்தது. இதனால் நகரில் குடிநீர் தட்டுப்பாடு ஓரளவு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திண்டுக்கல், நத்தம்

திண்டுக்கல் நகரில் நேற்று காலையில் இருந்து வழக்கம்போல் வெயில் கொளுத்தியது. மதிய வேளைக்கு பின்னர் வானில் கருமேகங்கள் திரண்டன. இதையடுத்து மாலை 5 மணி அளவில் மழை பெய்யத் தொடங்கியது. அப்போது பலத்த காற்றுடன் சுமார் ½ மணி நேரம் வரை மழை கொட்டி தீர்த்தது.

இதனால் திண்டுக்கல் நகர சாலைகளில் மழை தண்ணீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. அதேபோல் நத்தம் சுற்றுவட்டார பகுதியில் சுமார் 45 நிமிடங்கள் காற்றுடன் பலத்த மழை கொட்டியது. மேலும், பழனி மற்றும் நிலக்கோட்டை சுற்றுவட்டார பகுதிகள் உள்பட பல்வேறு இடங்களில் பரவலான அளவு சாரல் மழை பெய்தது.

## திருமருகல் ஒன்றியத்தில் உள்ள பாசன வாய்க்கால்கள் சீரமைக்கும் பணி அதிகாரி ஆய்வு



**திருமருகல்**; ஒன்றியத்தில் உள்ள பாசன வாய்க்கால்கள் சீரமைக்கும் பணிகளை பொதுப்பணித்துறை அதிகாரி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ரூ.44 லட்சம்

திருமருகல் ஒன்றியத்தில் முடிகொண்டானாறு, திருமலைராஜனாறு, அரசலாறு, வடக்குப்புத்தாறு, தெற்குப் புத்தாறு, வளப்பாறு, பிராவடையானாறு, நரிமணியாறு, ஆழியானாறு ஆகிய ஆறுகள் மூலம் பாசனம் பெற்று விவசாயம் செய்யப்படுகிறது. தற்போது விவசாயிகள் குறுவை சாகுபடி பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் நாகை மாவட்டத்திலுள்ள ஆறு மற்றும் வடிகால் வாய்கால்களின் சீரமைப்புப் பணிகள் பொதுப் பணித்துறை மூலம் நடைபெற்று வருகிறது. நன்னிலம் காவிரி வடிநில உட்கோட்டம், பேரளம் காவிரி வடிநில உட்கோட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள ஆறுகள் மற்றும் வடிகால் வாய்கால்கள் தூர்வாரும் பணி மற்றும் தடுப்பு சுவர் கட்டுதல் ஆகிய சீரமைப்பு பணிகள் ரூ.44லட்சம் மதிப்பில் நடைபெற்று வருகிறது. இதில் திருமருகல் ஒன்றியத்தில் வளப்பாறு, நரிமணியாறு, சன்னமங்கலம், காலாட்டி, கொங்கராயநல்லூர் ஆகிய இடங்களில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பணிகளை தஞ்சை காவிரி வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் கலைச்செல்வன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் இதுகுறித்து அவர் கூறியதாவது:-

<u>சீரமைப்பு</u>

பொதுப்பணித்துறை மூலம் திருமருகல் மற்றும் பேரளம் பகுதிகளில் உள்ள ஆறு மற்றும் வடிகால்கள் பராமரிப்பு நிதியிலிருந்து சீரமைக்கப்பட்டு வருகிறது. மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு திறந்து விடும் தண்ணீர் ஆறு மற்றும் பாசன வாய்க்கால்களில் தங்கு தடையின்றி செல்ல தேவையான இடங்களில் ஆறுகள் மற்றும் வாய்க்கால்களை தூர்வாரியும், மதகுகள், தடுப்பு சுவர்கள் ஆகியவை சீரமைக்கப்பட்டும் வருகின்றன. இப்பணிகளை துரிதமாகவும், செம்மையாகவும் செய்திட வேண்டுமென பொதுப்பணித் துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின்போது உதவி செயற்பொறியாளர்கள் நன்னிலம் வில்வேந்தன், பேரளம் அன்பரசன், உதவிப் பொறியாளர்கள் சுப்பிரமணியன், இளங்கோ மற்றும் பொதுப்பணித்துறை ஊழியர்கள் உடனிருந்தனர்.

**<u>நீலகிரி மாவட்டத்தில், சாரல் மழை</u>**



**நீலகிரி**; மாவட்டத்தில் நேற்று பல்வேறு இடங்களில் சாரல் மழை பெய்தது.

<u>ஊட்டியில் சாரல் மழை</u>

ஊட்டியில் நேற்று காலை முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. மதியம் 1 மணி முதல் ஊட்டி நகரில் சாரல் மழை பெய்தது. இதன் காரணமாக ஊட்டி தாவரவியல் பூங்கா, படகு இல்லம், தொட்டபெட்டா, ரோஜாபூங்கா, பைக்காரா, பைன்மரக் காடுகள், சூட்டிங்மேடு, கேத்தி பள்ளத்தாக்கு உள்பட பல்வேறு சுற்றுலா தலங்களை காணவந்த சுற்றுலா பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இது போல் குன்னூர், அருவங்காடு, வெலிங்டன் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மதியம் 1.30 மணியளவில் பலத்த மழை பெய்தது. கோத்தகிரி, அரவேணு, கைக்காட்டி, புதூர், ஒரசோலை, குஞ்சப்பனை, கூக்கல்தொரை கட்டப்பெட்டு உள்பட பல்வேறு இடங்களில் நேற்று மாலை 1 மணியளவில் பலத்த மழை பெய்தது. மஞ்சூர் பகுதியில் மஞ்சூர், தாய்சோலை, கோரகுந்தா, எடக்காடு, குந்தாபாலம், காந்திகண்டி, தங்காடு உள்ளிட்ட பகுதிகளில் மாலை 4 மணியளவில் சாரல் மழை பெய்தது.

<u>பந்தலூர்– கூடலூர்</u>

கூடலூர், பந்தலூர் தாலுகா பகுதிகளில் நேற்று மதியம் 3 மணியளவில் பலத்த மழை பெய்தது. இதனால், சாலைகளில் உள்ள கற்களை பெயர்த்துக் கொண்டு மழைநீர் ஓடியது. மேலும், தாழ்வான பகுதிக ளில் மழைநீர் குளம் போல் தேங்கி நின்றன. நீலகிரி மாவட்டத்தில் நேற்று பல்வேறு இடங்களில் மழை பெய்ததால் இரவில் கடும் குளிர் நிலவியது. இந்த மழை மேலும் சில நாட்கள் தொடர்ந்து பெய்தால் அணைகளில் நீர்மட்டம் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திருப்பதியில் பலத்த மழை**



**திருமலை**, திருப்பதி, திருச்சானூர், ஸ்ரீகாளஹஸ்தி, சந்திரகிரி, ரெங்கம்பேட்டை உள்பட பல பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 8 மணியில் இருந்து 11 மணிவரை 3 மணிநேரம் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்தது. திருப்பதி மலைப்பாதைகளில் ஒருசில இடங்களில் மரங்கள் சாய்ந்ததால், வாகனங்கள் மெதுவாக சென்றன. திருப்பதி, திருமலை பகுதிகளில் இரவு 9 மணியில் இருந்து 11 மணிவரை மின்சாரம் துண்டிக்கப்பட்டதால், இருள் சூழ்ந்து காணப்பட்டது. பக்தர்கள், பொதுமக்கள் நடமாட முடியாமல் அவதிப்பட்டனர்.

திருப்பதி இந்திராநகர், கோவிந்தராஜசாமி கோவில் அருகில், லட்சுமிநகர், கர்னால வீதி, திலக் ரோடு, துடா சாலை, கொர்லகுண்டா, மாருதிநகர், எஸ்.சி.வி.நகர், ரெயில்வே மேல்பாலம் சுரங்கப்பாதை ஆகிய இடங்களில் மழைநீர் தேங்கி கிடந்தது. மழைநீரில் வாகனங்கள் செல்ல முடியாமல் திணறின.